தினமணி

# திருந்திய நெல் சாகுபடியில் காவிரி டெல்டா விவசாயிகள் ஆர்வம்

எஸ். கல்யாணசுந்தரம்

First Published : 09 Jul 2011 03:44:46 AM IST



திருவாரூர் : காவிரி டெல்டா விவசாயிகள் நிகழ் குறுவை பருவத்தில் திருந்திய நெல் சாகுபடி என்னும் ஒற்றை நாற்று நடவு முறையில் அதிக அளவில் சாகுபடியை ஆர்வத்துடன் மேற்கொண்டு வருகின்றனர்.

திருந்திய நெல் சாகுபடி முறை என்பது ஒற்றை நாற்றை முக்கால் அடிக்கு முக்கால் அடி சதுர இடைவெளியில் நடுவதுதான். இந்த முறையிலான சாகுபடி மடகாஸ்கர் நாட்டில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு, நல்ல பலனை தந்துள்ளது. இதில் சில தொழில்நுட்ப முறைகளை வேளாண் துறை வகுத்து, 2003-2004-ம் ஆண்டில் தமிழகத்தில் இந்த முறையிலான சாகுபடி அறிமுகப்படுத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து, ஆண்டுதோறும் குறுவை, சம்பா ஆகிய பருவங்களில் மொத்த சாகுபடி பரப்பில் 20 முதல் 30 சதம் வரை திருந்திய நெல் சாகுபடியை மேற்கொள்ள வேளாண் துறை சார்பில் இலக்கு நிர்ணயிக்கப்படும். ஆனால், இதுவரையில் இலக்கு எட்டப்படவேயில்லை.

நிகழாண்டில், குறுவை சாகுபடிக்கு வழக்கமான நாளுக்கு முன்னதாகவே மேட்டூர் அணை திறக்கப்பட்டதால், குறுவை சாகுபடி வழக்கமான பரப்பைவிடக் கூடுதலாக நடைபெறும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

இந்நிலையில், நிகழாண்டில் குறுவைப் பருவத்தில் காவிரி டெல்டா பகுதிகளில் ஏறத்தாழ 75 சதம் அளவுக்கு திருந்திய நெல் சாகுபடி முறையின் கீழ் நெல் சாகுபடி நடைபெறுவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன.

குறைந்த செலவில் அதிக மகசூல் தரும் இந்த முறையிலான சாகுபடியை விவசாயிகள் அதிக அளவில் விரும்பியுள்ளதும், வேளாண் துறையினரின் ஊக்குவிப்பே இதற்கு காரணமாகச் சொல்லப்படுகிறது.

தஞ்சாவூர் மாவட்டம்: தஞ்சாவூர் மாவட்டத்தில் குறுவை சாகுபடி இயல்பான பரப்பு 40,000 ஹெக்டேர். நிகழாண்டுக்கு 42,500 ஹெக்டேர் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் இதுவரை 10,000 ஹெக்டேரில் நடவுப் பணிகள் முடிந்துள்ளன. இதில் திருந்திய நெல் சாகுபடி முறையிலான நடவு 5,014 ஹெக்டேர். தற்போது வழக்கமான முறையிலான சாகுபடிக்கு 9,380 ஹெக்டேர் பரப்பளவில் நடவு செய்யத் தேவையான நாற்றுகளும், திருந்திய நெல் முறையிலான சாகுபடிக்கு 13,400 ஹெக்டேர் பரப்பளவில் நடவு செய்யத் தேவையான நாற்றுகளும் விடப்பட்டுள்ளன.

திருவாரூர் மாவட்டம்: திருவாரூர் மாவட்டத்தில் இயல்பான குறுவை சாகுபடி பரப்பு 36,000 ஹெக்டேர். நிகழாண்டுக்கான இலக்கு 40,000 ஹெக்டேர். இதுவரை 15,000 ஹெக்டேரில் நடவு முடிந்துள்ளது. இதில் 5,310 ஹெக்டேர் திருந்திய நெல் சாகுபடி முறையிலான நடவு. தற்போது வழக்கமான முறையிலான சாகுபடிக்கு 10,000 ஹெக்டேரில் நடவு செய்யத் தேவையான நாற்றுகளும், திருந்திய நெல் முறையிலான சாகுபடிக்கு 20,000 ஹெக்டேர் பரப்பளவில் நடவு செய்யத் தேவையான நாற்றுகளும் விடப்பட்டுள்ளன.

நாகை மாவட்டம்: நாகை மாவட்டத்தில் இயல்பான குறுவை சாகுபடி பரப்பு 35,000 ஹெக்டேர். நிகழாண்டுக்கான இலக்கு 40,000 ஹெக்டேர். இதுவரையில், 28,880 ஹெக்டேரில் நடவுப் பணிகள் முடிவுற்றுள்ளன.

இதில் 16,200 ஹெக்டேர் திருந்திய நெல் சாகுபடி முறையிலான நடவு. தற்போது வழக்கமான முறையிலான சாகுபடிக்கு ஏறத்தாழ 11,000 ஹெக்டேரில் நடவு செய்யத் தேவையான நாற்றுகளும், திருந்திய நெல் சாகுபடிக்கு 11,000 ஹெக்டேர் பரப்பளவில் நடவு செய்யத் தேவையான நாற்றுகளும் விடப்பட்டுள்ளன.

இதுகுறித்து திருவாரூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் க. மயில்வாகணன் கூறியது:

திருந்திய நெல் சாகுபடியில் ஏக்கருக்கு 3 கிலோ விதை போதுமானது. வழக்கமான முறையிலான சாகுபடிக்கு வேளாண் துறை ஏக்கருக்கு 24 கிலோ விதை பரிந்துரைத்தாலும், விவசாயிகள் 30 முதல் 50 கிலோ வரையில் விதையைப் பயன்படுத்துகின்றனர்.

திருந்திய நெல் சாகுபடி முறையில் முக்கால் அடிக்கு முக்கால் அடி சதுர பரப்பில் ஒரு நாற்று மட்டுமே நடவு செய்யப்படுகிறது. இந்த ஒரு நாற்றிலிலேயே தூர்கள் அதிக அளவு வெடித்து 80 கதிர்கள் வரை வெளிவரும்.

மேலும், தண்ணீரும் 50 சதம் மீதமாகும். களை எடுக்கும் பணிக்கு ஏக்கருக்கு ஒர் ஆள் கோனோவீடர் கருவியை வைத்துக் கொண்டு எடுத்து விடலாம். நாற்று பறிக்கும் செலவில் 75 சதத்துக்கு மேல் மிச்சமாகும்.

வழக்கமான சாகுபடி முறையைவிட திருந்திய நெல் சாகுபடி முறையில் சாகுபடி செலவு ஏறத்தாழ ஏக்கருக்கு ரூ.4,000 அளவுக்கு குறையும். அதேபோல, தொழில்நுட்ப முறைகளை முழுமையாகப் பின்பற்றினால் மகசூலும் ஏக்கருக்கு 4 டன்கள் வரை கிடைக்கும்.

திருந்திய நெல் சாகுபடி மேற்கொள்ள விரும்பும் விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து தொழில்நுட்ப ஆலோசனைகளையும் வேளாண் துறை வழங்கி வருகிறது என்றார் மயில்வாகணன்.

காவிரி டெல்டா பகுதியில் போதிய அளவுக்கு விவசாயத் தொழிலாளர்கள் கிடைக்காதது, ஆள் கூலி, இடுபொருள்கள் விலை உயர்வு, தண்ணீர் பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் குறைந்த செலவில் அதிக மகசூல் தரும் திருந்திய நெல் சாகுபடியில் ஆர்வம் காட்டுவதற்கு காரணம் என்கின்றனர் விவசாயிகள்.

**அதிக மகசூல் பெற விதைப் பரிசோதனை அவசியம்**

First Published : 09 Jul 2011 12:33:35 PM IST

பெரம்பலூர், ஜூலை 8: பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்ட விவசாயிகள் அதிக மகசூல் பெற விதைப் பரிசோதனை செய்வது அவசியம் என்றார் பெரம்பலூர் விதைப் பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர் தெய்வீகன்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

விவசாயிகள், விதை உற்பத்தியாளர், விதை விற்பனையாளர்கள், தாங்கள் வைத்துள்ள விதை குவியல்களின் முளைப்புத் திறன், ஈரப்பதம் ஆகியவற்றை துல்லியமாக அறிந்து கொள்வது அவசியம். விதைப் பண்ணைக்கு, விதை மாதிரிகளை அனுப்பும் போது, பயிரின் பெயர், ரகம், குவியல் எண் ஆகியவற்றை குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். விதை ஆய்வுக் கட்டணமாக ஒரு மாதிரிக்கு ரூ. 30 செலுத்த வேண்டும். விதை மாதிரிகளை குறைந்தபட்ச அளவாக நெல் 50 கிராம், மக்காச்சோளம், நிலக்கடலை 500 கிராம், சூரியகாந்தி, பருத்தி (பஞ்சு நீக்கியது), உளுந்து 100 கிராம், கம்பு, எள் 25 கிராம் என்ற அளவில் அனுப்ப வேண்டும். விதைப் பரிசோதனை முடிவுகள் விதை விற்பனையாளர் அல்லது விவசாயிகளின் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படும். எனவே, பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களைச் சேர்ந்த விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விவசாயிகள் தங்களது விதை மாதிரிகளை, பெரம்பலூர் விதைப் பரிசோதனை நிலையத்துக்கு அனுப்பி வைத்து பயன் பெறலாம் என்றார் அவர்.

தினமலர்

### ஈரோடு சந்தையில் பருத்தி வரத்து அதிகரிப்பு

ஜூலை 09,2011,13:53



ஈரோடு : ஈரோடு சந்தையில் பருத்தி வரத்து அதிகரித்திருப்பதால், அப்பகுதியில் பருத்தி விலை பெருமளவு அதிகரித்துள்ளது. பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனை கழகம் மற்றும் அந்தியூர் கூட்டுறவு விற்பனை மையம் ஆகியவற்றிற்கு சேலம், திருப்பூர், சத்தியமங்கலம், புளியம்பட்டி, கோவை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து அதிகளவிலான பருத்தி விற்பனைக்கு வந்துள்ளது. இந்த வாரம் 8000 மூட்டை பருத்தி விற்பனைக்கு வந்துள்ளது. கடந்த வாரம் 2000 மூட்டைகள் மட்டுமே விற்பனைக்கு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இதன் மதிப்பு ரூ.85 லட்சம் ஆகும்.

### மூன்று ஆண்டுகளில் சீனாவின் உணவு பணவீக்கம் அதிகரிப்பு

ஜூலை 09,2011,11:30



பீஜிங் : கடந்த 3 ஆண்டுகளில் சீனாவின் உணவு பணவீக்கம் 6.4 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. தற்போது அந்நாட்டின் உணவு பணவீக்கம் 14.4 சதவீதமாகும். சீன மக்கள் தொகை, சம்பள உயர்வு உள்ளிட்டவைகள் இதற்கு காரணமாக கூறப்படுகின்றன. சீனாவின் நுகர்வோர் விலை

குறியீட்டின்படி ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதத்தில் பணவீக்கம் 6.4 சதவீதம் அதிகரித்து வருவதாக சீனாவின் தேசிய புள்ளியியல் துறை தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டு விலை உயர்வு காரணமாக ஜூன் மாதத்தில் உணவு பணவீக்கம் 3.7 சதவீதம் வரை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

**தெலுங்கானா 'பந்த்' எதிரொலிஓசூரில் தக்காளி விலை வீழ்ச்சி**

ஜூலை 09,2011,09:20



ஓசூர்: ஆந்திராவில், தெலுங்கானா, 'பந்த்' போராட்டத்தால், தமிழகத்தில் இருந்து அம்மாநிலத்திற்கு சரக்கு போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. ஓசூர் பகுதியில் தினம் ஏற்றுமதியாகும் பல ஆயிரம் டன் தக்காளி பழங்கள், ஏற்றுமதி செய்ய முடியாமல் தேக்கமடைந்ததால், விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தோட்டக்கலை பழப் பயிர்களில் மாம்பழத்துக்கு அடுத்தபடியாக, காய்கறி பயிர்களை விவசாயிகள் அதிகளவு சாகுபடி செய்கின்றனர். மாவட்டத்தில், 9,077 எக்டேர் நிலத்தில் காய்கறிகள் சாகுபடி செய்யப்படுகின்றன. இவற்றில், 500 எக்டேரில் சுழற்சி முறையில் தக்காளி, ஆண்டு முழுவதும் பயிரிடப்படுகிறது.ஓசூர் அருகே பத்தலப்பள்ளி, ராயக்கோட்டையில் தமிழகத்தில் மிகப் பெரிய தக்காளி சந்தைகள் உள்ளன. இங்கு கர்நாடகா, ஆந்திரா, கேரளா மற்றும் வட மாநிலங்களைச் சேர்ந்த வியாபாரிகள் தினசரி, பல ஆயிரம் டன் தக்காளிப் பழங்களை லாரிகள் மூலம் கொள்முதல் செய்வது வழக்கம்.சவுதி அரேபியா நாடுகளில் தக்காளி ஜூஸ், ஜாஸ் உள்ளிட்ட பல்வேறு உணவுப்பொருட்கள் தயார் செய்வதற்கு, ஓசூரில் இருந்து தக்காளி ஏற்றுமதியாகிறது.

இதனால், ஓசூர் தக்காளிகளுக்கு ஆண்டு முழுவதும் உள்ளூர், வெளியூரில் நல்ல வரவேற்பு இருந்து வருகிறது.கடந்த இரு மாதமாக கிலோ, 15 ரூபாய் முதல், 30 ரூபாய் வரை தக்காளி விற்பனையானது. ஆந்திராவில் தற்போது தெலுங்கானா போராட்டம் தீவிரமடைந்திருப்பதால், கடந்த நான்கு நாட்களாக தமிழகத்தில் இருந்து அம்மாநிலத்துக்கு, சரக்கு லாரி போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. ஓசூர் பகுதியில் இருந்து, தினமும் ஐதராபாத், ராயலசீமா,மேடக், கரீம்நகர், ரங்காரெட்டி உள்ளிட்ட எட்டு நகரங்களுக்கு, சரக்கு போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால், மொத்த மார்க்கெட்டில் தக்காளி தேக்கமடைந்து வருகிறது.மேலும், வழக்கத்துக்கு அதிகமான உற்பத்தியாலும், நேற்று தக்காளி கிலோ, 3 ரூபாய்க்கும், 22 கிலோ கொண்ட ஒரு கிரேடு தக்காளி, 55 ரூபாய் முதல், 60 ரூபாய்க்கும்

திடீரென்று விலை வீழ்ச்சியடைந்தது.ஓசூர் தாலுகாவில், தக்காளி பழங்களை பதப்படுத்தி வைக்க, குளிர்பதன கிடங்கு வசதியும் இல்லை. அதனால், செடிகளில் பறித்த பழங்களை விவசாயிகள் விற்பனை செய்ய முடியாமலும், இருப்பு வைக்க முடியாமலும், சாலைகளில் மலை போல் கொட்டி வருகின்றனர். பாகலூர் சாலை, கிருஷ்ணகிரி-பெங்களூரு சாலை, உத்தனப்பள்ளி சாலைகளில் மூட்டை மூட்டையாக வீசி, விவசாயிகள் தங்கள் அதிருப்தியைக் காட்டுகின்றனர். அந்த வழியாக செல்லும் கால்நடைகளுக்கு தீவனமாக தக்காளி மாறி வருகிறது.

**சென்ற மே மாதத்தில்தேயிலை உற்பத்தி 5 சதவீதம் உயர்வு**

ஜூலை 09,2011,00:26



புதுடில்லி : நாட்டின் தேயிலை உற்பத்தி, சென்ற மே மாதத்தில், 5 சதவீதம் உயர்ந்து, 7.62 கோடி கிலோவாக அதிகரித்துள்ளது. இது, கடந்த ஆண்டின் இதே மாதத்தில், 7.26 கோடி கிலோவாக இருந்தது. அசாம் மற்றும் மேற்கு வங்க மாநிலங்களில் விளைச்சல் அதிகமானதை தொடர்ந்து, தேயிலை உற்பத்திஅதிகரித்துள்ளது.வட இந்தியாவின் தேயிலை உற்பத்தி(அசாம், மேற்குவங்கம் உட்பட), 4.74 கோடி கிலோவிலிருந்து, 5.17 கோடி கிலோவாக அதிகரித்துள்ளது. அதேசமயம்,தென்னிந்திய பகுதிகளில் இதன் உற்பத்தி, 2.52 கோடி கிலோவிலிருந்து, 2.44 கோடி கிலோவாக சரிவடைந்துள்ளது.நடப்பு 2011ம் ஆண்டு ஜனவரி - மே மாதம் வரையிலான காலத்தில், தேயிலை உற்பத்தி 24.36 கோடி கிலோவாக அதிகரித்துள்ளது. இது, கடந்த 2010ம் ஆண்டு இதே காலத்தில், 23.50 கோடி கிலோவாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.இதே காலத்தில், வட இந்தியாவின் தேயிலை உற்பத்தி, 13.55 கோடி கிலோவிலிருந்து, 14.67 கோடி கிலோவாக அதிகரித்துள்ளது. தென்னிந்தியாவில் இதன் உற்பத்தி, 9.94 கோடி கிலோவிலிருந்து, 9.68 கோடி கிலோவாக சரிவடைந்துள்ளது.சென்ற மே மாதத்தில், நாட்டின் தேயிலை ஏற்றுமதி, 1.13 கோடி கிலோவாக அதிகரித்துள்ளது. கடந்த 2010ம் ஆண்டு மே மாதத்தில், இதன் ஏற்றுமதி, 1.12 கோடி கிலோவாக குறைந்திருந்தது.நடப்பு 2011ம் ஆண்டு, ஜனவரி முதல் மே வரையிலான ஐந்து மாத காலத்தில், நாட்டின் தேயிலை ஏற்றுமதி 6.23 கோடி கிலோவாக உள்ளது. இது, கடந்த ஆண்டு, இதே காலத்தில், 7.79 கிலோவாக அதிகரித்து காணப்பட்டது.

**விவசாய நிலத்தில் யானைகள் அட்டகாசம் வனத்துறை அலுவலகம் முற்றுகையிட முடிவு**

**மேட்டூர் அணையிலிருந்து குறுவை சாகுபடிக்கு 43 டி.எம்.சி., நீர் திறப்பு**

பதிவு செய்த நாள் : ஜூலை 09,2011,23:49 IST

மேட்டூர்: டெல்டா மாவட்ட குறுவை சாகுபடிக்காக, ஒரு மாதத்தில் மேட்டூர் அணையில் இருந்து, 43 டி.எம்.சி., நீர் திறக்கப்பட்டுள்ளது. மேட்டூர் அணையில் இருந்து டெல்டா குறுவை சாகுபடிக்காக, ஜூன் 6ம் தேதி நீர்திறக்கப்பட்டது. அதன் மூலம் டெல்டா மாவட்டங்களில், 3.09 லட்சம் ஏக்கரில் குறுவை பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் 6ம் தேதி மேட்டூர் அணை நீர்மட்டம், 116 அடியாகவும், நீர் இருப்பு, 87 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. கடந்த ஒரு மாதமாக மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு விநாடிக்கு, 12 ஆயிரம் கனஅடி முதல், 20 ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்பட்டது.

அதனால், ஒரு மாதத்தில் அணை நீர்மட்டம், 26 அடியும், நீர் இருப்பு, 34 டி.எம்.சி.,யும் குறைந்துள்ளது. அணையில் இருந்து குறுவை சாகுபடிக்கு இதுவரை, 42.398 டி.எம்.சி., நீர் திறக்கப்பட்டுள்ளது. நேற்று அணையின் நீர்மட்டம், 90.520 அடியாகவும், நீர் இருப்பு, 53.248 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. விநாடிக்கு, 4, 687 கனஅடி நீர்வந்தது.

மூன்று நாட்களாக அணையில் இருந்து விநாடிக்கு, 18 ஆயிரம் கனஅடி நீர் பாசனத்துக்கு திறக்கப்படுகிறது. நீர்திறப்பில் இதே நிலை நீடித்தால், இருப்பு நீரை, 35 நாட்களுக்கு மட்டுமே திறக்க முடியும். அதற்குள் காவிரி நீர்பிடிப்பு பகுதியில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்து, மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தால் மட்டுமே டெல்டா சம்பா சாகுபடிக்கு தட்டுபாடின்றி நீர் திறக்க முடியும் என்ற நிலை உள்ளது.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

# நடப்பு 2011–12 வேளாண் பருவத்திற்கான மதிப்பீடு உணவு தானியங்கள் உற்பத்தி 24.50 கோடி டன்னாக உயரும்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நம் நாட்டில், நடப்பு 2011–12 வேளாண் பருவத்தில் (ஜூலை–ஜூன்) உணவு தானியங்கள் உற்பத்தி 24.50 கோடி டன்னாக உயரும் என மத்திய வேளாண் அமைச்சக செயலாளர் பி.கே. பாசு தெரிவித்துள்ளார்.

தென்மேற்கு பருவமழை

ஜூன் மாதத்துடன் நிறைவடைந்த 2010–11 பருவத்தில் 23.59 கோடி டன் உணவு தானியங்கள் உற்பத்தியாகியுள்ளதாக முதல் கட்ட மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. ஆக, இம்மாதம் தொடங்கியுள்ள புதிய பருவத்தில் நாட்டின் உணவு உற்பத்தி மேலும் 91 லட்சம் டன் அதிகரிக்கும் என வேளாண் அமைச்சகம் நம்பிக்கை தெரிவித்துள்ளது. நடப்பு ஆண்டில் தென்மேற்கு பருவமழை நிலவரம் சீராக இல்லை. நம் நாட்டில் 600 மாவட்டங்கள் உள்ளன. இத்தனை மாவட்டங்களைக் கொண்ட ஒரு தேசத்தில் 70 முதல் 100 வரையிலான மாவட்டங்களில், சில இடங்களில் அதிகமான மழை இருப்பதும், சில பகுதிகளில் வறட்சி தோன்றுவதும் இயல்பான அம்சம்தான் என்று பாசு குறிப்பிட்டுள்ளார். எனினும் தென்மேற்குப் பருவமழை நிலவரம் நடப்பு பருவத்தின் உற்பத்தியில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை என்றும்

அவர் கூறியுள்ளார்.

அண்மையில் நிறைவடைந்த பருவத்தில் அரிசி உற்பத்தி 9.41 கோடி டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கோதுமை 8.43 கோடி டன்னும், இதர தானியங்கள் 4.02 கோடி டன்னும், பருப்பு வகைகள் 1.73 கோடி டன்னும் உற்பத்தியாகியிருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கரீப், ரபி பருவங்கள்

நம் நாட்டில் கரீஃப், ரபி ஆகிய இரண்டு பருவங்களில் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. கரீஃப் பயிர்கள் கோடை கால பயிர்கள் என்றும், ரபி பயிர்கள் குளிர்கால பயிர்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. கோதுமை குளிர்கால பயிராகும். இரண்டு பருவங்களிலுமே நெல் உற்பத்தி நடைபெறுகிறது என்றாலும், நாட்டின் மொத்த நெல் உற்பத்தியில் கரீஃப் பருவத்தின் பங்களிப்பே அதிகமாக உள்ளது. தற்போது நாடு முழுவதுமாக கரீஃப் பருவ சாகுபடி பணிகள் விறுவிறுப்புடன் நடைபெற்று வருகின்றன.

## நீலகிரி காய்கறிகளை சந்தைப்படுத்த குளிர் சாதன வசதிகளுடன், தோட்ட கூட்டமைப்பு பூங்கா அமைக்க ஏற்பாடு

குன்னூர், ஜூலை.9–

நீலகிரியில் உற்பத்தி செய்யப்படும் காய்கறி களை சந்தைப்படுத்த குளிர் சாதன வசதி களுடன் தோட்ட கூட்டமைப்பு பூங்கா அமைக்க ஏற்பாடு செய்யப்படும் என்று நீலகிரி தொழில்நுட்ப நிறு வனத்தின் இயக்குன ரும், முதன்மை செயல் அலுவலருமான சிவன் கூறினார்.

காய்கறிகள்

நீலகிரி மாவட்டம் குளிர் பிரதேசமாக இருப்பதால் மலைப்பயிர்களான உருளைக் கிழங்கு, கேரட், பீன்ஸ், பீட்ரூட், காலிபிளவர், முட்டைகோஸ் போன்ற காய்கறி பயிர் விளைவிக்கப்படுகிறது. மலை காய்கறி பயிர்களை சுமார் 20 ஆயிரம் விவசாயிகள் 20 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிட்டு உள்ளனர். இதன் சந்தை மதிப்பு சுமார் 800 கோடி ஆகும்.

நீலகிரி மாவட்டத்தில் ஒரு சில இடங்களில் ஐஸ்பர்க் லெட்யூஸ் என்ற காய்கறிகளை யும், ஸ்ட்ராபெர்ரி பழங்களை யும் உற்பத்தி செய்து வருகின் றனர். நீலகிரி மாவட்டத்தில் நீலகிரி கோட்ட தொழில் நுட்ப நிறுவனம் சவுதி அரேபியா நாட்டில் கல்ப் புரொடியூஸ் நிறுவனத்திட மிருந்து ஐஸ்பெர்க் காய்கறிகள் ஸ்ட்ராபெர்ரி

பழங்களை ஏற்றுமதி செய்ய ஆர்டர் பெற்று உள்ளது.

உற்பத்தி

நாள் ஒன்றுக்கு 4 டன் ஸ்ட்ராபெரி பழங்களும், 8 டன் ஐஸ்பெர்க் லெட்யூஸ் காய்கறிகளையும் ஏற்றுமதி செய்யப்படும். இதன் அடிப் படையில் நீலகிரி தோட்ட தொழில் நுட்ப நிறுவனம் 200 ஏக்கர் நிலப்பரப்பில் ஐஸ் பெர்க் லெட்யூஸ் காய்கறி களையும் 25 ஏக்கரில் ஸ்ட்ராபெரி பழங்களையும் உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்து உள்ளது.

இதற்காக நீலகிரி தோட்ட தொழில் நுட்ப நிறுவனம் விவசாயிகளுக்கு காய்கறி மற்றும் பழ நாற்றுக்களை வழங்கி உள்ளது. இதன் மூலம் ஊட்டி பிரஸ் என்ற பெயரில் வெளிநாட்டில் விற்பனை செய்ய ஏற்பாடு செய்து வரு கிறது. இது குறித்து நீலகிரி தொழில்நுட்ப நிறுவனத்தின் இயக்குனரும், முதன்மை செயல் அலுவலருமான சிவன் நிருபர்களுக்கு பேட்டி அளித் தார். அப்போது அவர் கூறிய தாவது:–

நீலகிரி தோட்ட தொழில் நுட்ப நிறுவனம் சவுதி அரே பியா நாட்டில் உள்ள கல்ப் புரோடியூஸ் நிறுவனத்திடம் ஏற்றுமதி ஆர்டர் பெற்றுள் ளது. நாள் ஒன்றுக்கு 4 டன் ஸ்ட்ராபெரி பழங்களும், 8 டன் ஐஸ்பெர்க் காய்கறிகளுக் கும் ஆர்டர் கிடைத்து உள்ளது. இவற்றின் மொத்த ஆண்டு வருமானம் சுமார் 50 கோடி ரூபாய் ஆகும்.

தோட்ட கூட்டமைப்பு பூங்கா

இதனால் நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் இந்த பொருட்களுக்கு அதிக விலை கிடைக்க வாய்ப்பு உள்து. கல்ப் யுரோடியூஸ் நிறுவனத்தில் உரிமையாளர் அப்துல் ரகுமான் சுபே நீலகிரியில் சுற்றுப்பயணம் செய்து விவசாய இடங்களை பார்வையிட்டு இந்த ஆர்டரை வழங்கி உள்ளார். இதன்படி நீலகிரி தொழில் நுட்ப நிறுவ னம் கூக்கல் தொரை, கொது முடி, நெடுகுளா, தொரையட்டி, நஞ்சநாடு, ஊட்டி, தங்காடு, குந்தா, சோலூர், கேத்தி மற்றும் தூதூர்மட்டம் ஆகிய பகுதிகளை மண்டலங்களாக அமைக்க உள்ளது. சுமார் ஸ்ட்ராபெரி பழ நாற்றுக்கள் 25 ஏக்கரிலும், ஐஸ்பெர்க் லெட்யூஸ் காய்கறி நாற்றுக்கள் 200 ஏக்கரிலும், 900 விவசாயி களால் பயிரிடப்பட உள்ளது.

நீலகிரியில் சாகுபடியாகும் எல்லா காய்கறிகளையும் எவ் வித சேதமும் இன்றி சந்தைப் படுத்த அனைத்து குளிர்சாதன வசதிகளுடன் தோட்ட கூட் டமைப்பு பூங்கா சுமார் 9 கோடி ரூபாய் மதிப்பில் மத் திய, மாநில அரசு நிதி உதவியுடன் நீலகிரி தோட்ட தொழில் நுட்ப நிறுவனம் மூலம் அமைக்கப்பட உள் ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,830-2,880

**மணிலா பயறு**

80 கிலோ கொண்ட மூட்டை
4,300-4,360

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட)
9,350-00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை
(சாக்கு வரிஉள்பட) 1,575-00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட
டின்(வரிஉள்பட) 1,856-00

**நல்லெண்ணெய்**

குமரகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா, புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1குவிண்டால்(வரிஉள்பட) 9,500-00
டின் (15கிலோ) 1,700-00

**விளக்கெண்ணெய்**

ஒருகுவிண்டால் (வரிஉள்பட)
10,700.00
15கிலோடின் (வரிஉள்பட) 1,850-00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15கிலோ
டின் (வரிஉள்பட) 1,155.00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணை)
15 கிலோ டின்(வரிஉள்பட) 1,555.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரிஉள்பட)1,100.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி) 540-00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,ஜூலை.8–

கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:–

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 11,500 | 150.00 |
| மல்லி (40கி) | ரூ. 3,200 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 3,800 | 108.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 1,960 | 110.00 |
| துவரம்பருப்பு | ரூ. 5,200 | 58.00 |
| கடலைப்பருப்பு (நாடு) | ரூ. 3,300 | 38.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) | ரூ. 6,400 | 73.00 |
| உடைபருப்பு (வெள்ளை) | ரூ. 6,900 | 73.00 |
| தட்டைபயிறு | ரூ. 4,000 | 46.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 4000 | 40.00 |
| கண்டல் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,200 | 42.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 7,200 | 72.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,600 | 66.00 |
| கொள்ளு | ரூ 2,000 | 22.00 |
| கடலைப்பருப்பு (டெல்லி) | ரூ. 3,100 | 31.00 |
| சர்க்கரை | ரூ. 2,700 | 27.00 |

### மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,ஜூலை.8–

கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:–

1. வி.797 22எம்.எம் ரூ. 5,905
2. ஜெயதார் (கர்நாடகா) ரூ. 7874
3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 8,998
4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 9,131
5. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 10,967
6. எம்.சி.பி.யு. 5 32 எம்.எம். ரூ. 18,272
7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 17,967

## கோவை உழவர் சந்தை

கோவை,ஜூலை.8–

கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:–

**காய்கறிகள் (கிலோவுக்கு)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 36–00 | காலிப்ளவர் | ரூ. | 24–25 |
| கத்தரிக்காய் | ரூ. | 16–20 | பொறியல் தட்டை | ரூ. | 16–18 |
| வெண்டைக்காய் | ரூ. | 16–20 | தேங்காய் | ரூ. | 8–11 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 11–12 | பட்டாணி | ரூ. | 120–00 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 12–13 | பூண்டு | ரூ. | 90–00 |
| புடலை | ரூ. | 16–22 | கறிவேப்பிலை | ரூ. | 12–10 |
| பீர்க்கான்காய் | ரூ. | 18–20 | அகத்தி | ரூ. | 17–00 |
| சுரைக்காய் | ரூ. | 12–14 | வாழைக்காய் | ரூ. | 20–00 |
| பாகற்காய் | ரூ. | 16–18 | குடைமிளகாய் | ரூ. | 32–36 |
| கொத்தவரை | ரூ. | 10–14 | சாதா பீன்ஸ் | ரூ. | 14–00 |
| பூசணிக்காய் | ரூ. | 10–00 | டபுள்பீன்ஸ் | ரூ. | 40–00 |
| அரசாணிக்காய் | ரூ. | 6–7 | கறிபீன்ஸ் | ரூ. | 18–00 |
| மேராக்காய் | ரூ. | 18–20 | புஸ்பீன்ஸ் | ரூ. | 18–20 |
| பச்சை மிளகாய் | ரூ. | 20–22 | காளான் | ரூ. | 80–150 |
| குண்டு மிளகாய் | ரூ. | 28–00 | இளநீர் (ஒன்று) | ரூ. | 11–00 |
| சின்னவெங்காயம் | ரூ. | 26–34 | மாங்காய் | ரூ. | 10–12 |
| பெரியவெங்காயம் | ரூ. | 14–00 | திராட்சை | ரூ. | 40–00 |
| இஞ்சி | ரூ. | 34–00 | சப்போட்டா 1கிலோ | ரூ. | 16–00 |
| முருங்கைக்காய் | ரூ. | 24–26 | கொய்யா1கிலோ | ரூ. | 30–00 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 24–20 | மாதுளை1கிலோ | ரூ. | 80–45 |
| சேனைகிழங்கு | ரூ. | 26–00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 13–00 |
| கருணைகிழங்கு | ரூ. | 30–00 | வரமிளகாய் | ரூ. | 90–00 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22–00 | மாம்பழம் | ரூ. | 20–50 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 15–00 | ஆப்பிள் | ரூ. | 110–130 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 14–00 | சாத்துக்குடி | ரூ. | 32–00 |
| சிறுகிழங்கு | ரூ. | 18–24 | நெல்லிக்காய் | ரூ. | 30–32 |
| முள்ளங்கி | ரூ. | 14–20 | ஆரஞ்சு | ரூ. | 70–00 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 20–24 | வெள்ளரி | ரூ. | 14–29 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 12–20 | புளி 1 கிலோ | ரூ. | 80–00 |
| நூல்கோல் | ரூ. | 22–00 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 32–30 |
| கொத்தமல்லி | ரூ. | 30–22 | அவரை | ரூ. | 14–16 |
| ட்ரினிப்ஸ் | ரூ. | 22–00 | நிலக்கடலை | ரூ. | 35–00 |
| முட்டைகோஸ் | ரூ. | 10–12 | மக்காச்சோளம் | ரூ. | 10–13 |
| கலர்கோஸ் | ரூ. | 15–00 | தர்பூசணி | ரூ. | 10–14 |
| புதினா | ரூ. | 16–00 | | | |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ. 24500 |
| மிளகு (சேட்டன்) | ரூ. 25,000 |
| மிளகு (வயநாடன்) | ரூ. 26,000 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 12,000 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 10,500 |
| சுக்கு (புதியது) | ரூ. 12000 |
| சுக்கு(பழையது) | ரூ. 10,100 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ. 1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ. 1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ. 9500 |
| கொப்பரை நாடன் | ரூ. 6750 |
| கொப்பரை ராசு | ரூ. 6200 |
| கொப்பரை தில்பசன் | ரூ. 6340 |
| கொப்பரை ராஜீபூ | ரூ. 7400 |
| உருண்டை கொப்பரை | ரூ. 6700 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 21450 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 20700 |
| ரப்பர் பால் | ரூ. 16500 |
| காப்பி | ரூ. 11100 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 3350 |
| நேந்திரகாய் | ரூ. 2450 |
| இஞ்சி | ரூ. 1200 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,ஜூலை.8–

கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:–

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,660 | 106.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1140 | 72.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1180 | 76.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1040 | —— |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1140 | 72.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,350 | 95.00 |
| தேங்காய்எண்ணை | | |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1600 | 110.00 |
| | ரூ. 1,850 | 125.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,020 | 57.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,570 | 100.00 |
| வனஸ்பதி | | |
| வில்லி பட்ஸ் பிராண்ட் | ரூ. 1,260 | – |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1010 | – |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,020 | – |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,020 | – |

### பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.199.00 | அதிகபட்சவிலை | ரூ.281.00 |
| சராசரி விலை | ரூ.171.01 | சாரசரி விலை | ரூ.240.07 |
| குறைந்தபட்சவிலை | ரூ.162.00 | குறைந்தபட்சவிலை | ரூ.210.00 |

**பட்டு நூல் ரூ.1,697**

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 16,584.00 | 16,584.00 | 16,600.00 |
| ஒரு கிராம் | 2,073.00 | 2,073.00 | 2,075.00 |
| **வெள்ளி** | | | |
| 1 கிலோ | 53,635.00 | 57,400.00 | 57,500.00 |
| ஒரு கிராம் | 57.40 | 57.40 | 57.50 |